# தேவனுடைய மாறாத பிரமாணம்




டாக்டர். டேவிட் இளங்கோவன்

# சீர்திருத்த பாப்டிஸ்ட் திருச்சபை

## REFORMED BAPTIST CHURCH

295, சாந்தி நகர், ஏற்காடு மெயின்ரோடு,

சேலம்-636008.

**கைபேசி எண்:** +91 98427 67184

**இணையதளம்:**

**www.tamilchristianmessages.com**

**www.reformedbaptistchurch.in**


உங்களுக்கு ஆவிக்குரிய குழப்பங்கள், கேள்விகள் இருப்பின் மேற்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, பகிர்ந்துகொள்ளலாம். அல்லது மேற்கண்ட முகவரிக்கு கடிதம் மூலம் பகிர்ந்துகொள்ளலாம்.

இந்த சிற்றேட்டின் செய்தி உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தால் எங்களோடு பகிந்துகொள்ளுங்கள். இதனை உங்களுக்கு தெரிந்த நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வையுங்கள்.

*நன்றி!!!*


**சீர்திருத்த சத்தியங்கள்**

# சீர்திருத்த பாப்டிஸ்ட் வெளியீடு

# தேவனுடைய மாறாத பிரமாணம்

*வேதம் மட்டுமே ஒரு மனிதனின் வாழ்க்கையில் உயர்வுக்கும், தாழ்விற்கும் அடிப்படை காரணமாக இருந்திருக்கிறது. இது இன்றைக்கு நமக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது. அப்படிப்பட்ட மகத்துவமான பிரமாணத்தின் அவசியத்தை இந்தக் கையேட்டில் பார்ப்போம்.*

**மோசே இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த தேவனுடைய பிரமாணம்:**

*இஸ்ரவேல் மக்கள் ஆபிரகாமின் சந்ததியாக ஆதியாகமம் புத்தகத்தில் இருந்த காலத்தில் தேவனுடைய பிரமாணம் தீர்க்கமாக கொடுக்கப்படாத ஒரு நிலை இருந்தது. இந்த ஜனங்கள் ஏறக்குறைய நானூற்று முப்பது வருடம் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். மோசே அந்த மக்களை வெளியே கொண்டுவந்து ஆண்டவருடைய பிரமாணத்தைப் போதிக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்தக் காரியம் இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தில் மிகப்பெரிய திருப்புமுனை என்று சொல்லலாம். கர்த்தர் இந்த ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதிப்பதற்கு முன்னதாகவே நியாயப்பிரமாணத்தைக் குறித்த ஒரு எச்சரிப்பைக் கொடுப்பதை நாம் யாத்திராகமத்தில் பார்க்கிறோம். "கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது" (யாத் 13:9). அதாவது நியாயப்பிரமாணத்தை எழுத்து வடிவில் கொடுப்பதற்கு முன்பாக, நியாயப்பிரமாணம் உன் வாழ்க்கையின் மையமாகக் காணப்பட வேண்டும் என்று எச்சரிக்கிறார். இந்த எச்சரிப்பானது ஏதோ இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரம் கொடுத்தது அல்ல. ஆரம்பத்தில் மனிதனை படைத்ததிலிருந்தே இந்த எச்சரிப்பை கொடுத்திருக்கிறார். இது எந்த காலத்துக்கும் பொருந்தும். மோசே இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து மறுபடியும் மறுபடியுமாக அதை நினைப்பூட்டினார். இந்த வேதப் பிரமாணத்தை மையமாக வைத்து வாழவேண்டும் என்று எச்சரிக்கிறார். "இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து அதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்" (உபா 4:1) நம்முடைய வாழ்க்கையிலும் இந்த பிரமாணமே மையமாகக் காணப்பட வேண்டும். இதிலிருந்து நாம் தவறும்பொழுது மாத்திரமே ஆவிக்குரிய வாழ்க்கையில் பின்னடைவை சந்திக்கிறோம். நாம் பிழைத்திருக்கும் படிக்கு தேவனுடைய கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும்.*

*"நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்" (உபா 4:5).* இது தேவனாகிய கர்த்தர் போதித்த கட்டளையாகும். இது மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டதே தவிர இது கர்த்தருடைய மாறாத பிரமாணமாகும். ஒவ்வொரு ஊழியக்காரனும் தேவனுடைய வார்த்தையினால் கற்பிக்கப்பட வேண்டும். தேவனுடைய பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளாமல் தேவனுடைய பிரமாணத்தை ஒருவரும் போதிக்க தகுதியற்றவர்கள். ஆகவேதான் எஸ்றா வேதத்தை ஆராய்ந்து கற்றுகொண்டான். நம்முடைய வாழ்க்கையிலும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிற மாறாத பிரமாணத்தை ஆராய்ந்து, அதை அப்படியே ஆத்துமாக்களுக்கு போதிக்கவேண்டும். *"ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்" (உபா 4:6).* இந்தப் பிரமாணத்தை நாம் போதிக்கும்படிக்கு நமக்கு ஞானமும் விவேகமும் தேவை. இந்தப் பிரமாணத்தை நம்முடைய பிள்ளைகளுக்கும் போதிக்கவேண்டும். *"உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் சாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்" (உபா 4:10).*

தேவனுடைய மாறாத பிரமாணத்தை தலைமுறை தலைமுறைதோறும் போதிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நாம் வாழும் சமுகத்தில் இது மறைந்துபோன ஒரு காலமாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவ பெற்றோர்கள் இந்த வேதப் பிரமாணத்தை சாக்கிரதையாய் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்க தவறுகிறார்கள். இன்றைக்கு சபைகளிலும், குடும்பங்களிலும் வேதம் புறகணிக்கப்பட்ட நிலைக்கு சென்றுவிட்டது. இதினால் சபைகளில் உயிர்மீட்சியைக் காணமுடிவதில்லை, குடும்பங்களில் தேவனுடைய ஆளுகை இல்லை. சமாதானமற்ற சந்தோஷமற்ற ஒரு புறஜாதியான வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவேதான் மோசே "நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படிக்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு என்றைக்கும் கொடுக்கிற

*தேசத்திலே நீ நீடித்த நாளாயிருக்கும்படிக்கும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவாய்" (உபா 4:40) என்று சொன்னார். நம்முடைய வாழ்க்கை எவ்விதம் காணப்படுகிறது? நம் வாழ்க்கையில் தேவனுடைய ஆளுகை காணப்படுகிறதா? ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது என்பதை உணராத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மோசே இஸ்ரவேல் மக்களுக்கு தன் வாழ்நாள் முழுவதும் சொன்ன ஒரு காரியம் தேவனுடைய பிரமாணத்தை கைக்கொள்ளுங்கள் என்பதே.*

**யோசுவா இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்த தேவனுடைய பிரமாணம்:**

*மோசே மரித்த பின்பாக தேவன் யோசுவாவை தெரிந்துகொள்ளுகிறார். யோசுவாவும் இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் தமக்கு கற்பித்த கட்டளைகளையே போதிக்கிறார். எந்தொரு சூழ்நிலையிலும் வேதம் போதுமானது என்பதையே தேவன் கற்றுக்கொடுக்கிறார். நம்முடைய வாழ்க்கைக்கும் வேதம் போதுமானது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். "நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசுவா 3-5) என்று யோசுவாவைப் பார்த்து கர்த்தர் சொன்னார். மோசே விட்டுசென்ற பணியை நீ செய்து முடிக்க வேண்டும், தேசத்தை நீ இஸ்ரவேல் மக்களுக்கு பங்கிடவேண்டும் என்று சொல்லுகிறார். அதற்கு நீ செய்யவேண்டியது எல்லாம் ஒரே ஒரு காரியம் தான் அது: "என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக" (யோசுவா 1:7) என்று கட்டளையிட்டார். வேதத்தை விட்டு எங்கும் விலகி செல்லாதே என்று தேவன் சொன்னார்.*

*இந்த கட்டளை யோசுவாவுக்கு மட்டுமல்ல, அது நமக்கும் பொருந்துகிற கட்டளையாகும். தேவனுடைய வார்த்தையை விட்டு நாம் இடது புறமும் சாயாமல், வலது புறமும் சாயாமல் அதாவது வேதத்தோடு ஒன்றையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது. வேதம் சொல்லுகிற வண்ணமே ஆத்துமாக்களுக்கு போதிக்கவேண்டும். ஆகவேதான் தேவன்: "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா?" (யோசுவா 1:9) என்று கேட்கிறார். தேவனுடைய வார்த்தையை நாம் தெளிவாக போதிக்கும்பொழுது கர்த்தர் நம்மோடு இருப்பார். நம்மை கைவிடவும் மாட்டார், நம்மை விட்டு விலகவும்மாட்டார். தேவனுடைய வார்த்தை நம் ஊழியத்தை, நம் சபையை உயர்த்தும். தேவனுடைய வார்த்தை மட்டுமே சபைக்கு போதுமானது.*

தேவனுடைய பிரமாணத்தை மறந்துபோன மக்கள்:

*இவ்விதமாக கட்டளையை பெற்ற மக்கள் பின்னாட்களில் தேவனுடைய வார்த்தையை மறந்துபோனார்கள். முன்னூறு ஆண்டுகள் நியாயாதிபதி காலங்களில் வேதத்தை மறந்து இருண்டுபோன காலமாக மாறியது. தேவன் கொடுத்த பிரமாணம் உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கப்பட்டது. தேவனுடைய பிரமாணமானது நம் கண்களுக்கு முன்பாக காட்சி பொருளாக இருக்கக்கூடாது. அது நம்முடைய மனதில் காணப்படவேண்டும். தேவனுடைய பிரமாணம் நம்முடைய இருதயத்தை ஆளுகை செய்யவேண்டும். நியாயாதிபதி காலம் முடிந்து சாமுவேல் தீர்க்கதரிசி காலத்தில் இஸ்ரவேல் மக்கள் யுத்தத்தில் வெற்றி கிடைக்குமென்று உடன்படிக்கை பெட்டியை சுமந்துகொண்டு போருக்கு சென்றார்கள். தேவனுடைய வார்த்தை என்பது உடன்படிக்கை பெட்டிக்குள் அல்ல, நம்முடைய இருதயத்துக்குள் காணப்படவேண்டும். அவ்விதமாக போரில் வெற்றி கிடைத்ததா? இல்லை. அவர்கள் தோல்வியையே சந்தித்தார்கள். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையானது நம் மனதில் ஆளுகை செய்யவில்லையென்றால் மிஞ்சுவது தோல்வியே. தேவனுடைய வார்த்தையானது மறக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்தது. இஸ்ரவேலின் தேவன் எங்கே? என்று கேட்கும் அளவிற்கு தேவனுடைய வார்த்தை மறக்கப்பட்டது.*

இராஜாக்களின் காலத்தில் தேவனுடைய பிரமாணம்:

*ஜீவனுள்ள வார்த்தையானது பல ஆண்டுகள் மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டு காலம் கடந்தது. ஒரு இராஜா தேவனுடைய ஆலயத்தை மீண்டுமாக சுத்தம் செய்ய சொல்லுகிறார். இந்த இராஜா எட்டு வயதில் இராஜாவாக பிரதிஷ்டை செய்யப்படுகிறார்.*

அவர் பெயர் யோசியா. அவ்விதமாக சுத்தம் செய்கிற வேளையிலே மறக்கப்பட்டு போன தேவனுடைய பிரமாணம் கண்டுபிடிக்கப்படுகிறது. இதனை 2 இராஜாக்களின் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம். "அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி: நான் கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பானிடத்தில் கொடுத்தான்; அவன் அதை வாசித்தான்" (2 இராஜா 22:8). பல ஆண்டுகளாக மறக்கப்பட்ட தேவனுடைய பிரமாணத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்து வாசிக்கிறான். அதனை அவன் மட்டும் வாசித்ததுமல்லாமல் சம்பிரதியாகிய சாப்பானிடத்திலும் கொடுக்கிறார். "அப்பொழுது சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு மறுஉத்தரவு சொல்லி, ஆலயத்திலே தொகையிட்டுக் கண்ட பணத்தை உமது அடியார் சேர்த்துக் கட்டி, அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள் என்று சொன்னான். சம்பிரதியாகிய சாப்பான் பின்னையும் ராஜாவை நோக்கி: ஆசாரியனாகிய இல்க்கியா என்னிடத்தில் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தான் என்று அறிவித்து, அதை ராஜாவுக்கு முன்பாக வாசித்தான்" (2 இராஜா 22:9-10). ஆசாரியனாகிய இல்க்கியா நியாயப்பிரமாண புத்தகம் என்று சொன்னான், ஆனால் சாப்பான் ஒரு புத்தகம் என்று சொல்லி வாசித்தான். நாமும் கூட இன்றைக்கு மற்ற புத்தகங்களைப் போலவே வேதமும் ஒரு புத்தகம் என்று எண்ணி வாசிக்கிறோம். என்ன ஒரு பரிதாபமான நிலை! "ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகீக்காமுக்கும், மிகாயாவின் குமாரனாகிய அக்போருக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் ராஜா கட்டளையிட்டது: கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் ஜனத்திற்காகவும் யூதாவனைத்திற்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்ய நம்முடைய பிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்றான்" (2இராஜா 22:11-13). தேவனுடைய வார்த்தையை கேட்ட யோசியா ராஜா தன் வஸ்திரத்தை கிழித்துக் கொண்டு தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறான். தேவனுடைய வார்த்தை இராஜாவின் இருதயத்தை பாதித்தது. நாம் தேவனுடைய வார்த்தையைப்

*புறக்கணிக்கும் பொழுது நம்மேல் எரிகிற தேவனுடைய கோபம் பெரியதாகும். நம்முடைய சபையிலும், குடும்பங்களிலும் தேவனுடைய வார்த்தையானது ஆளுகை செய்யவில்லை என்றால் அதின் முடிவு வெறுமையே. தேவனுடைய வார்த்தையை யோசியா கேட்டது மாத்திரமல்ல, மேலுமாக "ராஜா யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மூப்பரையெல்லாம் அழைப்பித்தான்; அவர்கள் அவனிடத்தில் கூடினபோது, ராஜாவும், அவனோடு யூதாவின் மனுஷர் யாவரும் எருசலேமின் குடிகள் அனைவரும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சிறியோர் துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள சகலரும் கர்த்தரின் ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான்" (2இராஜா 23:1-2). எல்லோரும் கேட்கும் படியாக தேவனுடைய பிரமாணத்தை எல்லோருக்குமாக வாசிக்கிறான். "அப்பொழுது ராஜா, தூண் அருகே நின்று, கர்த்தரைப் பின்பற்றி நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணினான்; ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள்" (2இராஜா 23:3). இந்த ஜனங்களும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டபொழுது இருதயத்தில் பாதிக்கப்பட்டவர்களாக தேவனோடு மீண்டுமாக உடன்படிக்கை பண்ணுகிறார்கள். இன்றைக்கு நாமும் கூட தேவனுடைய வார்த்தைக்கு மிக தொலைவில் வாழ்ந்து கொண்டு வரலாம். ஆனால் மனந்திரும்புங்கள். தேவனோடு மீண்டுமாக உடன்படிக்கை பண்ணுங்கள். நம்முடைய தோல்விகளையெல்லாம் ஒப்புக்கொண்டு நம்முடைய பாவங்களை எல்லாம் அறிக்கைப்பண்ணி தேவனோடு ஒப்புரவாகக் கடவோம். நம் சபைகளில் ஆத்துமாக்கள் உயிர்மீட்சி பெறவேண்டுமானால் தேவனோடு ஒப்புரவாகி தேவனுடைய பிரமாணம் இருதயங்களில் ஆளுகை செய்யவேண்டும்.*

*"பின்பு ராஜா: பாகாலுக்கும் விக்கிரகத்தோப்புக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்க, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும் இரண்டாம் வகுப்பிலுள்ள ஆசாரியர்களுக்கும் வாசல் காக்கிறவர்களுக்கும் கட்டளையிட்டு, அவைகளை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன்*

வெளிகளில் சுட்டெரித்து, அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணினான். யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் வைத்த பூஜாசாரிகளையும், பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங்காட்டினவர்களையும் அகற்றிவிட்டான். தோப்பு விக்கிரகத்தைக் கர்த்தரின் ஆலயத்திலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோய், அதைக் கீதரோன் ஆற்று ஓரத்திலே சுட்டெரித்து, அதைத் தூளாக்கி, அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகளின்மேல் போடுவித்தான். கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடத்திலுள்ள இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப்போட்டான். அவன் யூதாவின் பட்டணங்களிலுள்ள எல்லா ஆசாரியரையும் வரச்சொல்லி, கேபாமுதல் பெயெர்செபாமட்டும் ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளைத் தீட்டாக்கி, ஒலிமுகவாசல்களின் மேடைகளையும், பட்டணத்து வாசலுக்குப்போகும் வழிக்கு இடதுபுறமாயிருக்கிற பட்டணத்தலைவனாகிய யோசுவாவின் வாசற்படியில் இருந்த மேடையையும் இடித்துப்போட்டான்" (2 இராஜா 23:4-8). யோசியா தன் வாழ்க்கையில் தேவனுடைய பிரமாணத்திற்கு புறம்பான எல்லாவற்றையும் அகற்றிப்போட்டான். தேவனுடைய காரியங்களை மாத்திரம் பற்றிக்கொண்டான். நம்முடைய சபைகளில் தேவனுடைய வார்த்தையானது மையமாக காணப்பட்டதானால் ஆத்துமாக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புவார்கள். சபைகளில் உண்மையான சீர்திருத்தம் ஏற்படும். தேவனுடைய வார்த்தை மட்டுமே உயிர்மீட்சியைக் கொண்டுவரும். "பின்பு ராஜா: இந்த உடன்படிக்கையின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள் என்று சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டான். இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேலின் ராஜாக்கள் யூதாவின் ராஜாக்கள் ஆகிய அவர்களுடைய சகல நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை. ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே கர்த்தருக்கு இந்தப் பஸ்கா எருசலேமிலே ஆசரிக்கப்பட்டது. ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கு, யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும், சுருபங்களையும் நரகலான விக்கிரகங்களையும், யூதாதேசத்திலும்

*எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்கினான். கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான்; அவனைப் போலொத்த ராஜா அவனுக்குமுன் இருந்ததுமில்லை, அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை" (2 இராஜா 23:21-25). என்ன ஒரு அற்புதமான செயல்! யோசியாவைப் போல ஒரு ராஜா அவனுக்கு முன் தோன்றினதுமில்லை, அவனுக்குப் பின் தோன்றவுமில்லை என்று தேவன் சாட்சியிடுகிறார்.*

தீர்க்கத்தரிசிகளின் காலத்தில் தேவனுடைய பிரமாணம்:

*இந்த இராஜாவுக்கு பின்பாக ஜனங்கள் மீண்டுமாக தேவனுடைய வார்த்தையை மறந்து போனார்கள். தேவன் மீண்டுமாக தீர்க்கத்தரிசிகளை அனுப்புகிறார். ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கத்தரிசிகள் தேவனுடைய வார்த்தையின் பக்கமாக திரும்புங்கள் என்று அறைகூவல் விடுத்தனர். "இதினிமித்தம் அக்கினிஜுவாலை வைக்கோலைப் பட்சிப்பதுபோலவும், செத்தையானது நெருப்புக்கு இரையாகி எரிந்துபோவதுபோலவும், அவர்கள் வேர் வாடி, அவர்கள் துளிர் தூசியைப்போல் பறந்துபோகும்; அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, இஸ்ரவேலிலுள்ள பரிசுத்தருடைய வசனத்தை அசட்டைபண்ணினார்களே" (ஏசாயா 5:24). இஸ்ரவேல் ஜனங்கள் வேதத்தை வெறுத்து, கர்த்தருடைய வசனத்தை அசட்டைபண்ணினார்கள். ஆனாலும் தேவன் அவர்களுக்கு ஒரே ஒரு வழியை வைத்திருந்தார். அந்த வழி வேதம் மட்டுமே. "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20). தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொரு வழியென்பது நமக்குக் கிடையாது. ஆனால் அந்த ஜனங்கள் மிகவும் பின்வாங்கினார்கள். அவர்களைக் குறித்து தேவன்: "இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள்"(ஏசாயா 30:9) என்று சொல்லுகிறார். இன்றைக்கு தேவன் நம்மைக்குறித்து எவ்விதம் சாட்சியிடக் கூடும்? நம் இருதயத்தை ஆராய்ந்து பார்ப்போம். இன்னுமாக "புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது" (ஏசாயா 40:8) என்று மீண்டும் மீண்டுமாக ஜனங்களுக்கு வேதத்தின் முக்கியத்துவத்தைப் போதிக்கிறார்.*

*ஏசாயாவிற்கு பிற்பாடு எரேமியாவும் இதையே தான் ஜனங்களுக்குப் போதிக்கிறார். "கர்த்தர் எங்கேயென்று ஆசாரியர்கள் சொல்லாமலும், வேதத்தைப் போதிக்கிறவர்கள் என்னை அறியாமலுமிருந்து, மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம்பண்ணினார்கள்; தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, வீணானவைகளைப் பின்பற்றினார்கள்"(எரேமியா 2:8). இன்றைக்கு வேதத்தை போதிக்கிறவர்கள் இவ்வண்ணமே காணப்படுகிறார்கள். என்னவொரு பரிதாபமான நிலை! வேதத்தை போதிக்கிறவர்கள், வேதம் என்ன என்பது தெரியாமலும், தேவன் யாரென்பதை அறியாமலும் இருக்கிறார்கள். நாம் எவ்விதம் காணப்படுகிறோம்? "ஆசாரியரிடத்திலே வேதமும், ஞானிகளிடத்திலே ஆலோசனையும், தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்துபோவதில்லை" (எரேமியா 18:18) என்று கர்த்தர் சொன்னார். ஆனால் இந்த ஜனங்களோ "இவன் வார்த்தைகளை நாம் கவனியாமல், இவனை நாவினாலே வெட்டிப்போடுவோம் வாருங்கள்" என்று சொன்னார்கள். தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ்ந்தவர்கள் தீர்க்கத்தரிசிகள். அவர்களே மெய்யான ஊழியர்கள். அவர்களே தேவனுடைய வார்த்தைக்கு மெய்யாய் கீழ்ப்படிந்தவர்கள். ஆனால் நாம் எப்படி காணப்படுகிறோம்? "அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள் பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் வேதத்தின்படியும் என் கட்டளைகளின்படியும் நடக்கிறதுமில்லை" (எரேமியா 42:10). இப்படியாக நாம் இருப்போமானால் இன்னுமாக ஒரே ஒரு நம்பிக்கையுண்டு, தேவன் பக்கமாக திரும்புவோம். "அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்" (எசேக்கியேல் 11:19) என்ற வாக்கு தேவன் நமக்கு அருளியுள்ளார். அந்த வாக்குறுதியை நாம் பற்றிக்கொண்டு நாம் மனந்திரும்பி வேதத்திற்கு கீழ்ப்படிவோமாக. வேதத்தை மட்டுமே சபையில் மையமாக வைக்கும்பொழுது, தேவன் நம்முடைய சபைகளில் உயிர்மீட்சியைக் கட்டளையிடுவார். அப்பொழுது தேவன் "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" என்று சொல்லுவார்.*

**கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!**

# TAMIL DAILY DEVOTION 2019

- தின தியானம்
- நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள்
- இலவச புத்தகங்கள்
- நினைப்பூட்டி
- நேரடி ஒளிபரப்பு
- ரேடியோ 24x7




Available on the App Store

Get it on Google play

**ANDROID**

SCAN THE CODE WITH YOUR MOBILE DEVICE TO DOWNLOAD OR USE THE LINK BELOW IN THE BROWSER

**http://bit.do/dailydev**

**iPHONE & iPAD**

SCAN THE CODE WITH YOUR IPAD OR IPHONE TO DOWNLOAD OR TYPE THE LINK BELOW IN YOUR BROWSER

**http://bit.do/itunesdailydev**

Visit our Website

**www.tamilchristianmessages.com**